2017

2017

No. of Printed Pages : 3

401807

**6956**

Register Number

முதலாம் ஆண்டு

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

**First Year**

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**15x2=30**

1. கவன வீச்சு என்றால் என்ன ? கவன ஈர்ப்பின் முக்கியத்துவம் யாது ?
2. ஊக்குவித்தல் பற்றிய மாஸ்லோ கூற்றை எழுதுக.
3. செயல்திட்டம் முறை பற்றிய கில்பாட்ரிக்கின் வரையறை கூறுக.
4. செயல்திட்டத்தின் படிநிலைகள் யாவை ?
5. விளையாட்டு முறையின் பயன்களை எழுதுக.
6. ஒப்பார் குழுக்கற்றல் என்றால் என்ன ?
7. சுழரங்கம் மற்றும் பயிலரங்கள் - வேறுபடுத்துக.
8. செய்தித் தொடர்பை ஏற்படுத்தும் ஊடகங்களின் வகைகளை எழுதுக.
9. விளக்கம் அளித்தல் என்றால் என்ன ?

[ Turn over

10. செய்தி தொடர்பு என்றால் என்ன ?

11. கற்றல் பற்றிய கிளேசர் கூற்று யாது ?

12. திறனாய்வுச் சிந்தனையின் கல்விப் பயன்களை எழுதுக.

13. கற்க கற்றல் என்றால் என்ன ?

14. கூட்டுறவு கற்றலின் பொதுவான அணுகுமுறைகள் யாவை ?

15. செய்முறை அழகு கற்றல் பாங்கு என்றால் என்ன ?

## பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 10x4=40

16. கவனத்தின் வகைகளை விளக்குக.

17. வகுப்பறையில் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை எவ்வாறு அமைய வேண்டும் ?

18. செயல்வழிக் கற்றலின் பயன்களை எழுதுக.

19. வாழ்க்கை வரலாற்று முறையின் நிறைகள் மற்றும் குறைகளை எழுதுக.

20. வகுப்பறையில், ஏதேனும் ஒரு தலைப்பிற்கு பட்டிமன்றம் ஒன்றை எவ்வாறு அமைப்பாய் என்று எழுதுக.

21. தானே கற்றல் என்றால் என்ன ? அதன் நன்மைகளை எழுதுக.

22. செய்தித் தொடர்பின் வகைகளை விளக்குக.

23. வகுப்பறைச் செய்தித் தொடர்பில் ஏற்படும் தடைகளை எவ்வாறு எதிர்கொள்வீர்கள் ?

24. புளூமின் கற்றல் பகுபாய்வை விளக்குக.

25. அறிவறிதலின் கல்விப் பயன்களை எழுதுக.

26. வகுப்பறைச் சூழலில் கல்வி அறிவை பெறும் மாணவர்களின் கற்றல் பாங்கினை மேம்படுத்த ஏதேனும் நான்கு வகைகளை விளக்குக.

27. கூட்டுறவுக் கற்றலின் உட்கூறுகளை கூறி உதாரணம் கொண்டு விளக்குக.

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 3x10=30

28. (அ) வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நிகழ்வில் மாணவர்களின் கவனத்தை நிலை நிறுத்த பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) கண்டறி முறையின் படிநிலைகளை கூறி, வகுப்பறையில் கண்டறி முறையை செயல்படுத்துதல் பற்றி உதாரணம் கொண்டு விளக்குக.

29. (அ) கற்றல் செயல்பாடுகளில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) ஆசிரியர் – மாணவர்கிடையேயும், மாணவர் – மாணவர்கிடையேயும் சிறந்த செய்தித் தொடர்பை ஏற்படுத்துவதற்கான சில வழிமுறைகளை உதாரணம் கொண்டு விளக்குக.

30. (அ) மாணவர்களிடையே ஆக்கச் சிந்தனைக்கான மனப்பான்மை எவ்வாறு அமைய வேண்டும் என்று விரிவாக விளக்குக.

**அல்லது**

(ஆ) இணைந்து கற்றல் ஒரு குழந்தையின் கற்றலை எவ்வாறு மேம்படுத்தும் என்பதை விரிவாக எழுதுக.

-o0o-